பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

23 04 2024 7 15

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இரண்டு நாள் பயணமாக இன்று உத்தராகண்ட் செல்கிறார்.

2. மக்களவைத் தேர்தலுக்கான இரண்டாம்கட்ட வாக்குப்பதிவு நடைபெற உள்ள 89 தொகுதிகளில் நாளையுடன் பிரச்சாரம் முடிவடைவதால் அரசியல் தலைவர்கள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

3. தில்லி முதலமைச்சர் திரு. அரவிந்த் கெஜ்ரிவாலின் உடல்நிலையைப் பரிசோதிக்க எய்ம்ஸ் மருத்துவக் குழுவை அமைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

4. தைவான் நாட்டில் நேற்றிரவு சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவில் 6 புள்ளி ஒன்றாக பதிவானது.

5. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் சென்னை – லக்னோ அணிகள் மோதுகின்றன.

<u>*---- இனி விரிவான செய்திகள் --*</u>

<<<<>>>>

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இரண்டு நாள் பயணமாக இன்று உத்தராகண்ட் செல்கிறார்.

ரிஷிகேஷில் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனையின் பட்டமளிப்பு விழாவில் குடியரசுத்தலைவர் சிறப்பு விருந்தினராக பங்கேற்கிறார்.

மேலும் ரிஷிகேஷ் **Parmarth** ஆசிரமத்திற்குச் செல்லும் திருமதி திரௌபதி முர்மு, அதன் நிர்வாகிகளுடன் கலந்துரையாட உள்ளார்.

இன்று மாலை நடைபெறும் கங்கா ஆரத்தி நிகழ்ச்சியிலும் அவர் பங்கேற்கிறார்.

டேராடூனில் உள்ள இந்திய வனத்துறை பயிற்சி கழகத்தில் பணி முடித்தவர்களுக்கான பட்டமளிப்பு விழாவில் நாளை குடியரசுத்தலைவர் கலந்துகொள்கிறார்.

<<<<>>>>

மக்களவைத் தேர்தலுக்கான இரண்டாம்கட்ட வாக்குப்பதிவு நடைபெற உள்ள 89 தொகுதிகளில் நாளையுடன் பிரச்சாரம் முடிவுக்கு வர இருப்பதால் அரசியல் தலைவர்கள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

13 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் அடங்கிய இந்த தொகுதிகளில் வரும் 26ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

மகாராஷ்டிர மாநிலம் **Akola,** அமராவதி உள்ளிட்ட தொகுதிகளில் பிஜேபி வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டினார்.

இதனிடையே திரு. அமித் ஷா வெளியிட்டுள்ள அறிக்கையில், குடியுரிமை திருத்தச் சட்டம் தொடர்பாக காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. ப. சிதம்பரம் தெரிவித்த கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

சாமானிய மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கக் கூடிய இந்தச் சட்டம் திரும்பப் பெறப்படும் என்று திரு. சிதம்பரம் கூறியிருப்பது வேடிக்கையானது என திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. ராகுல் காந்தி தமது சமூக வலைதளப் பதிவில், இந்தத் தேர்தல் ஆட்சியமைப்பதற்கான தேர்தல் மட்டுமல்ல நாட்டைக் காப்பாற்றக்கூடிய, அரசியலமைப்புச் சட்டத்தை பாதுகாக்கக்கூடிய தேர்தல் என்று கூறியுள்ளார்.

இதற்கிடையே மக்களவைத் தேர்தலுக்கான மூன்றாம் கட்ட வாக்குப்பதிவு நடைபெற உள்ள 94 தொகுதிகளின் வேட்புமனுக்களை திரும்பப் பெறுவதற்கான காலக்கெடு நேற்றுடன் நிறைவடைந்தது.

அடுத்த மாதம் ஏழாம் தேதி மூன்றாம் கட்டத் தேர்தல் நடைபெற உள்ளது.

இந்தநிலையில் மக்களவைத் தேர்தலுக்கான எஞ்சியகட்ட வாக்குப்பதிவின்போது கோடை வெயிலின் தாக்கம் குறித்து உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கென சிறப்பு பணிக்குழு ஒன்றை தேர்தல் ஆணையம் ஏற்படுத்தியுள்ளது.

புதுதில்லியில் தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. ராஜீவ் குமார் தலைமையில் நேற்று நடைபெற்ற ஆய்வின்போது இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

<<<<>>>>

மதுபானக் கொள்கை முறைகேடு வழக்கில் கைதாகி தில்லி திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ள அம்மாநில முதலமைச்சர் திரு. அரவிந்த் கெஜ்ரிவாலின் உடல்நிலையைப் பரிசோதிக்க எய்ம்ஸ் மருத்துவக் குழுவை அமைக்க தில்லி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தனது உடல்நிலை தொடர்பாக ஆலோசனை பெறுவதற்கு மருத்துவருடன் காணொலி மூலம் பேச அனுமதி கோரி திரு. அரவிந்த் கெஜ்ரிவால் தில்லி நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி காவேரி பவேஜா, கெஜ்ரிவாலின் கோரிக்கையை ஏற்க மறுத்துவிட்டார்.

என்றாலும் கெஜ்ரிவாலுக்கு ரத்தத்தில் சர்க்கரையை கட்டுக்குள் வைக்க இன்சுலின் அவசியமா என்பதை ஆய்வு செய்யவும், உடல்நல பிரச்சினைகளை பரிசோதிக்கவும் மருத்துவக் குழுவை அமைக்குமாறு எய்ம்ஸ் மருத்துவமனைக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

<<<<>>>>

மருந்து உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் விற்பனையகங்களில் நடத்தப்பட்ட பரிசோதனையில் 67 மருந்துகள் தரமற்றவை என கண்டறியப்பட்டுள்ளதாக மத்திய மருந்து தரக் கட்டுப்பாட்டு வாரியம் அறிவித்துள்ளது.

அவற்றில் ஒரு மருந்து தவறான வர்த்தகப் பெயருடன் விற்பனை செய்யப்பட்டதும் தெரியவந்துள்ளது.

பெரும்பாலான மருந்துகள், மேற்குவங்கம், இமாச்சலப்பிரதேசம், உத்தராகண்ட் மாநிலங்களில் தயாரிக்கப்பட்டவை என்றும் அந்த வாரியம் தெரிவித்துள்ளது.

போலி மருந்துகளைக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்கப்படுவதன் ஒரு பகுதியாக மருந்து தரக் கட்டுப்பாட்டு வாரியம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

<<<<>>>>

முல்லைப்பெரியாறு அணைப் பகுதியில் வாகனங்களை நிறுத்துவது தொடர்பான வழக்கில் இந்திய கணக்கெடுப்பு அமைப்பு அளித்துள்ள அறிக்கையை நிராகரிக்க வேண்டும் என உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு வலியுறுத்தியுள்ளது.

அணைப் பகுதியில் மிகப்பெரிய வாகன நிறுத்த மையம் அமைக்க கேரள வனத்துறை முடிவு செய்துள்ளது.

இது தொடர்பான வழக்கு விசாரணையின்போது வாகன நிறுத்த மையம் அமைக்கும் பகுதி தமிழக அரசுக்கு குத்தகைக்கு விடப்பட்ட இடத்தில் இல்லை என இந்திய கணக்கெடுப்பு அமைப்பு தெரிவித்திருந்தது.

ஆனால் அந்த அமைப்பின் அறிக்கையை நிராகரிக்க வேண்டும் என தமிழக அரசின் சார்பில் உச்சநீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக பதிலளிக்குமாறு கேரள அரசுக்கு நான்கு வார அவகாசம் வழங்கிய நீதிபதிகள், விசாரணையை ஜூலை 10ஆம் தேதிக்கு ஒத்தி வைத்தனர்.

<<<<>>>>

கர்நாடக மாநிலத்திற்கு வறட்சி நிவாரணம் அளிப்பது தொடர்பாக பரிசீலிக்க தேர்தல் ஆணையம் அனுமதி அளித்துள்ளதாக உச்சநீதிமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

கர்நாடக மாநிலத்தில் 40 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மிக மோசமான வறட்சி ஏற்பட்டுள்ளதன் காரணமாக தேசிய பேரிடர் நிவாரண நிதியில் இருந்து நிதி ஒதுக்குமாறு மத்திய அரசுக்கு உத்தரவிடக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்டது.

கர்நாடக அரசு தாக்கல் செய்த அந்த மனுவில் கரீப் பருவத்தில் 48 லட்சம் ஹெக்டேருக்கும் அதிகமான விளைநிலங்களில் வேளாண் மற்றும் தோட்டக் கலைப் பயிர்கள் சேதமடைந்ததால் 35 ஆயிரத்து 162 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்தியக் குழு பார்வையிட்டு அறிக்கை சமர்ப்பித்து 6 மாதங்கள் ஆன பின்னரும் வறட்சி நிவாரணம் அளிப்பது குறித்து மத்திய அரசு முடிவெடுக்கவில்லை என கர்நாடக அரசு அந்த மனுவில் தெரிவித்திருந்தது.

இந்த நிலையில் இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் இந்த விவகாரத்தில் அனைத்து நடவடிக்கைகளையும் இணக்கமாக மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்து விசாரணையை அடுத்த வாரத்திற்கு ஒத்திவைத்தார்.

<<<<>>>>

தமிழகத்தின் மதுரையில் நடைபெறும் சித்திரைத் திருவிழாவின் முக்கிய நிகழ்வான கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் வைபவம் இன்று காலை கோலாகலமாக நடைபெற்றது.

லட்சக்கணக்கானோர் பங்கேற்று கோவிந்தா முழக்கத்துடன் சுவாமி தரிசனம் செய்தனர்.

மதுரையில் பிரசித்தி பெற்ற சித்திரைத் திருவிழா கடந்த மாதம் 19ஆம் தேதி தொடங்கி நடைபெற்று வந்தது.

விழாவின் முக்கிய நிகழ்வான கள்ளழகர் தங்கக் குதிரை வாகனத்தில் எழுந்தருளி, மூன்றுமாவடி, தல்லாகுளம் பகுதிகளை வந்தடைந்தார்.

நேற்றிரவு பிரசன்ன வெங்கடாசலபதி கோவிலில் திருமஞ்சனம் நடைபெற்றது.

இன்று அதிகாலை ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் சூடிக் கொடுத்த மாலையை ஏற்றுக்கொண்டு, தங்கக் குதிரை வாகனத்தில் கள்ளழகர் எழுந்தருளினார்.

பின்னர் அங்கிருந்து புறப்பட்ட அழகரை வீரராகவப் பெருமாள் எதிர்கொண்டு வரவேற்க வைகை ஆற்றில் இறங்கும் விமரிசையாக நடைபெற்றது.

இதில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் இருந்த வந்த பக்தகர்கள் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்தனர்.

இதையொட்டி மதுரையில் பாதுகாப்புப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டிருந்தன.

<<<<>>>>

சட்டவிரோத பணப்பரிமாற்ற தடைச்சட்ட வழக்கில் வங்கி ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்காக முன்னாள் அமைச்சர் திரு. செந்தில் பாலாஜி, சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டார்.

இந்த வழக்கில் இருந்து விடுவிக்கக்கோரி செந்தில் பாலாஜி தாக்கல் செய்த மனுமீதான தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்த வழக்கில் மீண்டும் வாதிட அனுமதிக்கக் கோரி செந்தில் பாலாஜி தாக்கல் செய்த மனுவை ஏற்றுக்கொண்ட அமர்வு நீதிமன்ற நீதிபதி அல்லி, அதற்கு அனுமதி வழங்கி இருந்தார்.

வங்கி ஆவணங்களில் மாற்றம் இருப்பதால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களை வழங்க வேண்டும் எனக் கோரி இருந்த நிலையில், செந்தில் பாலாஜி நேற்று அவற்றைப் பெற்றுக்கொண்டார்.

<<<<>>>>

பாகிஸ்தானின் பலுசிஸ்தான், பஞ்சாப் மாகாணங்களில் நடைபெற்ற இடைத்தேர்தலில் நவாஸ் ஷெரீஃப் தலைமையிலான ஆளும் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சி வெற்றி பெற்றுள்ளது.

இந்த மாகாணங்களில் 21 தொகுதிகளுக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் பெரும்பாலான தொகுதிகளை அக்கட்சி கைப்பற்றியுள்ளது.

பஞ்சாப் மாகாணத்தில் இடைத்தேர்தல் வாக்குப்பதிவின்போது, ஒரு வாக்குச்சாவடியில் ஏற்பட்ட மோதலில் ஒருவர் உயிரிழந்தார். இதையடுத்து பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

மொத்தம் 12 தொகுதிகளை ஆளும் கட்சி கைப்பற்றி இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

<<<<>>>>

தைவான் நாட்டில் நேற்றிரவு அடுத்தடுத்து நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவில் 6 புள்ளி ஒன்றாக பதிவானது.

தைவானின் கிழக்குப் பகுதி நகரமான **Hualien** நகரில் இருந்து 28 கிலோமீட்டர் தொலைவில் நிலநடுக்கம் பதிவானதாகவும், பூமிக்கு அடியில் சுமார் 10 கிலோமீட்டர் ஆழத்தில் நிலநடுக்கம் பதிவானதாகவும் அந்நாட்டு புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தொடர்ந்து அடுத்தடுத்து நில அதிர்வுகள் உணரப்பட்டதாகவும், சேத விவரங்கள் குறித்து உடனடியாக தகவல் ஏதுமில்லை என்றும் அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

முன்னதாக இந்த மாத தொடக்கத்தில் தைவானில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் 13 பேர் உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது.

<<<<>>>>

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் ராஜஸ்தான் அணி 9 விக்கெட் வித்தியாசத்தில் மும்பை அணியை வென்றது.

ஜெய்ப்பூரில் நேற்றிரவு நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் விளையாடிய மும்பை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 179 ரன் எடுத்தது.

அந்த அணியின் திலக் வர்மா அதிகபட்சமாக 65 ரன் எடுத்தார். **Nehal Wadhera** 49 ரன் சேர்த்தார்.

180 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய ராஜஸ்தான் அணி, ஒரு விக்கெட்டை மட்டுமே இழந்து 183 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

யஷஷ்வி ஜெய்ஸ்வால் 104 ரன் சேர்த்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இன்று நடைபெறும் ஆட்டத்தில் சென்னை – லக்னோ அணிகள் மோதுகின்றன.

சென்னையில் இப்போட்டி இரவு ஏழரை மணிக்கு தொடங்கும்.

<<<<>>>>

நாகையில் நடைபெற்ற மாநில அளவிலான கபடிப் போட்டி இறுதி ஆட்டத்தில் மயிலாடுதுறை மாவட்ட அணி வெற்றி பெற்று முதலிடத்தைப் பிடித்தது.

**<<<<The End>>>>**